26.08.2025.

STC.673/2017.

ம.சா.1, ஆனந்தன் த/பெ.ஏழுமலை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எங்கள் குடும்பத்திற்கு மொத்த வருமானம் எங்களுக்கு சொந்தமான 1 1/2 ஏக்கர் விவசாய நிலத்தில் இருந்துதான் கிடைக்கின்றது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரன் உள்ளார் மற்றும் தாய் தந்தை ஆகியோர்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வருகிறோம். நான் டிப்பளமோ EEE 2006 முதல் 2008 காலத்தில் படித்துள்ளேன். நான் படித்து முடித்துவிட்டு வேலை தேடி வீட்டில் இருந்தேன் என்றால் படித்து முடித்தவுடன் சென்னை கார் கம்பெனியில் பயிற்சி வேலைக்கு சேர்ந்தேன். தற்போது லோட்டஸ் நிறுவனத்தில் வேலைக்கு பார்த்து வருகிறேன். சிப்காட்டில் எப்போது வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 2015ம் வருடம் வேலைக்கு சேர்ந்தேன். 2010ம் ஆண்டு முதல் 2015ம் ஆண்டுவரை வேலை தேடிக்கொண்டு வீட்டில்தான் இருந்தேன் என்றால் விவசாயம் செய்துகொண்டும், மாடு வளர்த்து பால் விற்பனை செய்துகொண்டிருந்தேன். நான் எங்கள் ஊரில் குறைந்த வட்டிக்கு பணம் கடன் கொடுத்துவந்தேன் என்றால் தெரிந்தவர்களுக்கு மட்டும் கொடுத்து வந்தேன். நான் குறைந்த பட்சம் ரூ.50,000/-மும் அதிக பட்சம் ரூ.5 லட்சம்வரை கடன் கொடுப்பது வழக்கம். வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யவேண்டும் என்றால் சட்டப்படி லைசன்ஸ் பெற்றுதான் கொடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் நான் தெரிந்தவர்களுக்கு மட்டும் கைமாற்றாக பணம் கொடுப்பேன். வட்டிக்கு பணம் கொடுப்பது இல்லை.

நான் பணம் கொடுப்பது லாப நோக்கத்திற்காக அல்ல. நான் கொடுக்கும் பணத்திற்கு ஆவணம் எதையும் எழுதி வாங்குவது இல்லை. நம்பிக்கையின் பேரில்தான் கொடுப்பேன். நான் எத்தனை நபர்களுக்கு அவ்வாறு கடன் கொடுத்துள்ளேன் என்றால் 4 அல்லது 5 நபர்கள் இருக்கும். சாத்தம்பூண்டி செல்வராஜ், தோப்பு வெங்கடேஷ், சின்ன கொழப்பலூர் பேரரசு ஆகியோர்களுக்கு கடன் கெடுத்துள்ளேன். மேற்படி நபர்கள் எனது உறவுகாரர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை தவிர வேறு யாருக்கும் எந்த காலத்திலும் கடன் கொடுத்தது இல்லை.

எதிரி எந்த ஊர் என்றால் காஞ்சிபுரத்தை சார்ந்தவர். தோப்பு வெங்கடேஷ் என்பவர்தான் எதிரியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேற்படி தோப்பு வெங்கடேஷ் தனியார் பேரூந்தில் நடத்துனராக இருந்து வருகிறார். எனது மனுவில் எதிரியை தோப்பு வெங்கடேஷன் என்பவர்தான் அறிமுகம் செய்து வைத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக நான் குறிப்பிடவில்லை என்றால் நான் குறிப்பிட்டேன் ஆனால் மனுவில் இடம் பெறவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் படித்து பார்த்துதான் கையெழுத்துபோட்டேன் என்றால் படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டுவிட்டேன்.

படித்து பார்க்காமல் நான் கையெழுத்து போட்டேன் என்றால் மனு எவ்வாறு தயாரிக்கப்படவேண்டும் என்று எனக்கு தெரியாது. இந்தியாவில் பண மதிப்பிழப்பு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த கால கட்டம் 08.11.2016 முதல் 30.12.2016 வரையென்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் ரூ.500/-, ரூ.1000/- ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று கூறி வங்கியில் திரும்ப ஒப்படைக்க கூறப்பட்டது என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் என்னிடம் இருந்து ரூ.500/-, ரூ.1000/- நோட்டுகளை வங்கியில் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் ஒரு நாளைக்கு ஒரு நபர் ரூ2000/-ம் மட்டும்தான் எடிஎம் இயந்திரத்தில் எடுக்க முடியும் என்றால் சரிதான். அந்த கால கட்டத்தில் நகை அடகு வைத்தால்கூட அதற்குரிய பணத்தை கையில் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல கொடுத்தார்கள். நான் தினமும் எடிஎம்-மூலம் ரூ.2000/-ம் மட்டும் எடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு 1.2.2017ம் தேதி கடன் கொடுத்ததாக சொல்லப்படும் 3 லட்சத்தி பத்தாயிரம் எந்த வகையில் கிடைத்தது என்றால் நெல் விற்ற பணம் மற்றும் பால் விற்ற பணம் மற்றும் ஆடு விற்ற பணம் ஆகியவை மூலம் கிடைத்தது. மேற்படி நெற்பயிரை யாரிடம் விற்றேன் என்றால் கண்ணன் என்ற நெல் வியபாரியிடம் விற்றேன். எத்தனை நெல் மூட்டைகள் விற்றேன் என்றால் சுமார் 130 மூட்டைகள் இருக்கும்.

நெல் மூட்டைகள் விற்ற கணக்கு விவரம் எனது அம்மாவிற்குதான் தெரியும். மேற்படி நெல் பயிர் செய்ததற்கான செலவினங்கள் போக குடும்ப செலவிற்காக எனது அம்மா வைத்துக்கொள்வார்கள் என்றால் சரிதான். மாதத்திற்கு பால் பணம் எவ்வளவுவரும் என்றால் சுமார் ரூ.20,000/- முதல் ரூ.25,000/-ம் வரும். 2 மாதங்களுக்குண்டான பால் பணம் எனது அம்மாதான் வாங்குவார். ஆடுகள் எத்தனை ஆடுகளை விற்றேன் என்றால் சுமார் 42 ஆடுகள் விற்றோம் அதை யாரிடம் விற்றேன் என்றால் ஆடு வியபாரியிடம் விற்றேன். அந்த பணமும் எனது தாயார்தான் பெற்றுக்கொண்டார். மேற்படி வரவு செலவுகளின்படி எந்த பணமும் எனது கையிருப்பில் இருக்காது என்றால் சீட்டு பணம் மட்டும் என் கையில் இருக்கும். எத்தனை லட்ச ரூபாய் சீட்டு போட்டிருந்தேன் என்றால் ரூ.2 லட்சம் ரூபாய் சீட்டு ஒன்று, ரூ.80,000/- சீட்டு ஒன்று, ரூ.50,000/-ம் சீட்டு ஒன்று போட்டிருந்தேன். மேற்படி சீட்டுகளை யாரிடம் போட்டிருந்தேன் என்றால் சைதாபேட்டையில் எனது அத்தைக்கு தெரிந்தவரிடம் சீட்டு போட்டிருந்தேன். மேற்படி சீட்டுகளை சென்னை தனியார் நிறுவனத்தில் பயிற்சியாளராக வேலை பார்த்தபோது போட்டுவந்தேன். நிறுவனத்தில் மாத சம்பளம் ரூ.9900/- மற்றும் கூடுதல் பணியுடன் சேர்த்து ரூ.14,500/- பெற்று வந்தேன்.

எதிரிக்கு கடன் கொடுத்தபோது எத்தனை ரூ.500/- மற்றும் ரூ.1000/- நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் ரூ.100/- ரூபாய் மற்றும் ரூ.200/- நோட்டுகளாக கொடுத்தேன். மேற்படி தொகை எனது அத்தையிடம் சீட்டுபோட்டு பெற்ற பணத்தின்மூலம் வந்தது மற்றும் ஆடு விற்ற பணத்தின்மூலம் வந்தது. நான் கொடுத்த பணத்தில் எத்தனை ரூ.200/-, ரூ.100/- ரூபாய் நோட்டுகள் இருந்தது என்று ஞாபகம் இல்லை. நான் சொல்லும் கால கட்டத்தில் ஒரு நபர் வங்கி மூலம் ரூ.2000/-ம் மட்டும்தான் பெறமுடியும். அதனால் நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே கடன் கொடுத்திருந்தால் யார் யாரிடமிருந்து எவ்வளவு பணம் பெற்றேன் என்ற விவரத்தினை

சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல ் பணம் எனது அம்மாவிடம் கொடுத்து குடும்ப செலவுகள் போக மீதிதொகை இருந்திருக்காது. நான் கடன் கொடுத்ததாக காசோலையை தயாரித்து எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம ் காசோலை வரும்போது அதில ் எதிரியின ் கையெழுத்து மட்டும்தான் இருந்தது என்றால் சரியல்ல. முழுவதுமாக நிரப்பப்பட்டுதான் இருந்தது. என்னிடம் காட்டப்படும் காசோலை தொகை அழகாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றாலும், பெயர் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டையும் எதிரியால்தான் எழுதப்பட்டது. என்னிடம் காசோலை கொடுத்தபோது எதிரியின் கையொப்பம் மட்டும்தான் இருந்தது என்றாலும் அதுவும் தோப்பு வெங்கடேசன்தான் காசோலை கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

மேற்படி தோப்பு வெங்கடேசன் நடத்துனராக பணிபுரியும் பேருந்தில் தொலைந்துபோன காசோலையை என்னிடம் கொடுத்து அதனை நான் நிரப்பி எதிரிக்கு எதிராக இவ்வழக்கினை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள தேதி என்னால் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிதான் நிரப்பி கொடுத்தார். காசோலையில் தேதிக்கு பிறகுதான் வங்கியில் காசோலையை வசூலுக்காக தாக்கல ் செய்தேன். மேற்படி 15.02.2017ம ் தேதிக்கு முன்பு காசோலையை வங்கிக்கு கொண்டு செல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மனுதாரர் தரப்பு சான்றாவணம்-1 காசோலைக்கு பின்புறம் எதிரியின் வங்கி கணக்கில் No balance on 06.02.2017 என்று உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வாசகம் காசோலையின் பின்புறம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி No balance on 06.02.2017 என்ற வாசகத்திற்கு அருகில் 4478 என்றுள்ளது. அது எதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரியாமல் மேற்படி காசோலையை யாரும் வங்கிக்கு எடுத்துச்செல்லவில்லை என்றால் எனது மாமா எடுத்துச்சென்று விவரம் கேட்டு வருவார். எனது மாமா எடுத்துச்சென்று வங்கியில் கேட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது மாமா எந்த ஊரில் உள்ளார் என்றால் தெள்ளார் கொரக்கோட்டையில் இருக்கிறார். மேற்படி எனது மாமாவிடம் காசோலையை கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல கொடுத்தேன். நானும் எனது மாமாவும் சேர்ந்துதான் வங்கிக்கு சென்றோம். காசோலையில் தேதி போடுவதற்கு முன்பு வங்கிக்கு சென்று எதிரியின் வங்கி கணக்கில் பணம் உள்ளதா இல்லையா என்று கேட்டுவிட்டு பின்னர் தேதியை எழுதினோம் என்றால் சரியல்ல. நான் காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள 15.02.2017 தேதிக்கு பின்புதான் நானும் எனது மாமாவும் வங்கிக்கு சென்றோமா என்றால் சரிதான். அதற்கு முன்பு எனது மாமா வங்கிக்கு சென்று விசாரித்துவிட்டு வந்தார். எனது மாமா வங்கிக்கு விசாரிக்க சென்றபோது நான் ஊரில் இல்லையென்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் ஊரில்தான் இருந்தேன்.

என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை எதற்காக எனது மாமாவிடம் கொடுத்து அனுப்பினேன் என்றால் எனது மாமாவிற்கு வங்கி விவரம ் பற்றி தெரியும் என்பதால் கொடுத்து அனுப்பினேன். எனது மாமா என்ன படித்துள்ளார் என்றால் அவர் பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக இருந்து வருகிறார். என்ன காரணத்திற்காக எனது மாமாவுடன் வங்கிக்கு செல்லவில்லை என்றால் நான் ஒரு இறப்பு நிகழ்ச்சிக்கு சென்றதால் செல்லவில்லை.

மேற்படி இறந்துபோன நபர் எனது மாமாவிற்கும் உறவு முறையானவர் என்றால் இல்லை. எனது மாமாவை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்துவர நான் தயாராக உள்ளேன். பேரூந்தில் தொலைந்துபோன காசோலையை தோப்பு வெங்கடேஷ் எடுத்து கொடுத்து என் மாமா தேவராஜியை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.